Q23:38 2119
N56
11 2770

722

உடையார்கோயில்

# திருக்களாவுடையார் கோயில் வரலாறு

(கரவிந்தேஸ்வரம்)



722
1-56
OFFICE OF THE [REGISTRAR] OF BOOKS
28 MAR 1956
[M]ADRAS
38·2193

முன் கோபுர வாயில்

நான வெளியீடு — 1956

உ

# உடையார் கோயில்
# திருக்களாவுடையார் கோயில் வரலாறு

(கரவீச்சுரம்)

---

திருச்சிராப்பள்ளி ஓய்வுபெற்ற தமிழ் ஆசிரியரும்
அறநிலையப் பாதுகாப்பின் (H. R. & C. E.) ஆதரவில்
பல கோயில் வரலாறுகளை எழுதியவரும் ஆகிய

**திரு. R. பஞ்சநதம் பிள்ளை அவர்களால்**

எழுதப்பெற்று

மேற்படி தேவஸ்தானம்
நிர்வாக அதிகாரி

**திரு. K. கிருஷ்ணமூர்த்தி முதலியார் அவர்கள்**
**திரு. A. K. அண்ணாமலைத் தென்கொண்டார் அவர்கள்**
டிரஸ்டி

ஆகியோரால் வெளியிடப்பெற்றது

**தேவஸ்தான வெளியீடு**

1956

உரிமை செய்யப்பெற்றது ] [ விலை 4 அணா

O23:38. 21193.T4
N56

## உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1 | கோயிலும் இருப்பிடமும் | ... 5 |
| 2 | கோயிலின் அமைப்பு | ... 10 |
| 3 | மூர்த்திகளின் பெயர்கள் | ... 11 |
| 4 | தீர்த்தங்கள் | ... 11 |
| 5 | தலப்பெருமைகள் | ... 13 |
| 6 | திருப்பணிகள் | ... 14 |
| 7 | சிற்பங்கள் | ... 16 |
| 8 | தினப்பூஜையும், திருவிழாக்களும் | ... 16 |
| 9 | வருமானமும், சொ... | ... 17 |
| 10 | நிர்வாகம் | ... 17 |
| 11 | கல்வெட்டுக்கள் | ... 18 |
| 12 | புராண வரலாறுகள் | ... 25 |
| 13 | துதிப்பாடல்கள் | ... 33 |


112770

## கோயில் விளக்கம்

**கோயில்**—திருக்களாவுடையார் கோயில் (கரவிந்தேஸ்வரம்)
**இடம்**—உடையார் கோயில்
**மூலவர்**—திருக்களாவுடையார் (கரவிந்தேஸ்வரர்)
**அம்மன்**—தர்மவல்லி
**தீர்த்தம்**—திரிபுவன மாதேவிப் பேரேரி (வேததீர்த்தம்)
**மரம்**—திருக்களா (கரவிந்தம்)

தஞ்சை ஜில்லா, பாபநாசம் தாலூகாவில், அம்மாபேட்டை ரயில் நிலையத்திற்குப் பக்கத்திலுள்ளது.

## முன்னுரை

தெய்வ உணர்ச்சியை உண்டாக்கும் சிறப்பிடங்களாக ஆன்றோர்கள் அமைத்த ஆலயங்கள் விளங்குகின்றன. ஆலயங்களுக்குச் சென்று வழிபடுதல் மிகவும் நல்லது. அவைகளுள் தஞ்சாவூர் ஜில்லா, பாபநாசம் தாலூகாவில் தஞ்சை—நாகூர் பிரிவில் அம்மாபேட்டை ரயில் நிலையத்திற்குப் பக்கத்தில் திருக்களாவுடையார் கோயில் என்னும் தலம் உள்ளது. வடமொழியில் கரவிந்தேஸ்வரம் என்பது தற்போது கரவந்தீஸ்வரர் கோயில் என வழங்குகிறது. பழமையான கோயில், பல கல்வெட்டுக்களையுடையது, சுற்றிலும் திருக்குளத்தை உடையது. கோயிலுக்கு வருவோர் கோயிலின் பெருமைகளையும் அறிந்துகொள்வது நலம். சென்னை அறநிலையப் பாதுகாப்பு இலாகா (Hindu Religious & Charitable Endowments) அனுப்பிய சுற்றறிக்கையின்படி இவ்வரலாறு ஸ்காந்த புராணக் கதைகளைத் தழுவிச் • சுருக்கமாக எழுதப்பெற்று H. R. & C. E. துணை ஆணையாளர் (Dy. Commissioner) திரு. S. கணேசம் பிள்ளை B. A. அவர்களால் அங்கீகாரம் செய்யப்பெற்றது.


பழங்காலச் சின்னங்களாகிய கோயிற் சிற்பங்களைப் பாதுகாப்பதிலும், தலவரலாறுகளை வெளியிடச் செய்வதிலும் தற்போதுள்ள அறநிலையப் பாதுகாப்புத் தலைவர்கள் வேண்டுவன செய்துவருகிறார்கள். இதில் கோயில் விளக்கமும், தலப்பெருமைகளும் புராணவரலாறுகளும், துதிப் பாடல்களும் சேர்க்கப்பெற்றுள்ளன. சிறப்பாக இக் கோயிலின் கல்வெட்டுக்கள் படித்து மகிழ்தற்குரியவை. அன்பர்கள் படித்துத் திருக்களாவுடையாரின் திருவருளைப் பெறுவார்களாக.

திருச்சிராப்பள்ளி
மலைக்கோட்டை
17—1—56

**R. பஞ்சநதம் பிள்ளை,**
தமிழ் ஆசிரியர்


## 4. கோயிலின் படம்

தென்வடவடி 166. (பரப்பு 40338 சதுர அடி




எண்களின் விளக்கம் :

1. நந்தி மண்டபம்
2. முன்கோபுர வாயில்
3. வசந்தமண்டபம்
4. உக்ரசாந்தி விநாயகர்
5. கிணறு
6. நந்தவனம்
7. யாகசாலை
8. வாகன மண்டபம்
9. உக்கிராணம் (சாமான் அறை)
10. மடைப்பள்ளி
11. நர்த்தன விநாயகர்
12. பிரதான விநாயகர்
13. முக்குறுணிப் பிள்ளையார்
14. பிரம்மபுரீஸ்வரர்
15. ஆனந்தபுரீஸ்வரர்
16. இரட்டைப்பிள்ளை
17. முருகன்சந்நிதி [யார்
18. வேதபுரீஸ்வரர்
19. சதுர்வேதபுரீஸ்வரர்
20. கஜலட்சுமி
21. பூலோகநாதர்
22. திருக்களாச்செடி
23. சண்டிகேஸ்வரர்
24. அலுவலகம் (Office)
25. மூலவர் திருக்களாவுடையார்
26. அம்மன் தர்மவல்லி
27. உள்கோபுர வாயில்




உ

உடையார்கோயில்

# திருக்களாவுடையார் கோயில் வரலாறு

"காரணனே தென்கருவாபுரியிற் களாநிழற்கீழ்ப்
பூரணனே என்பு பூண்டவனே பொன்பொருப்புவில்லா
நாரணனே கணையாப் புரமூன்றெய்த நாயகனே
ஆரணனே அப்பனே அடியேன் உன் அடைக்கலமே."

— திருக்கருவை அந்தாதி

## 1. கோயிலும் இருப்பிடமும்

தென்னாடாகிய தமிழ்நாடு, மிகுதியான கோயில் க்களைக் கொண்ட இடமாகும். நாட்டை வளப்படுத் தும் ஆறுகளும், சோலைகளும், வாவிகளும், சாலை களும் சூழ்ந்து இயற்கைக் காட்சிகளைத் தந்து இன் பம் ஊட்டுகின்றன. வானளாவிய கோபுரங்களும், விமானங்களும், காண்போருக்குத் தூரத்திலிருந்த படியே தெய்வ உணர்ச்சியைத் தூண்டும் நிலையில் அமைந்துள்ளன. உடலுக்கு உணவைத்தரும் வயல் கள் அமைந்திருப்பதுபோல, உள்ளத்துக்கு உணவா கிய பக்தி உணர்ச்சியை உண்டாக்கும் பாங்குடைய ஆலயங்கள் பல அணிகளாக விளங்குகின்றன. "திருக்கோயில் இல்லாத திருவிலூரும் பாங்கினோடு பல தளிகள் இல்லாவூரும் அவை எல்லாம் ஊரல்ல" என்றபடிக்கில்லாமல் நாட்டின் பல இடங்களிலும் சைவ – வைணவத்தலங்கள் பல ஆங்காங்கு மிளிர் கின்றன. இவ்வகையில் தென்னாடு தெய்வ மணங் கமழும் திருநாடாகத் திகழ்கிறது. "தென்னாடுடைய சிவனேபோற்றி" என்று ஆன்றோரும் புகழ்ந் துள்ளார்.

யாவற்றையும் கடந்த பரம் பொருளாகிய இறை வன் உலகத்திலுள்ள பல உயிர்களும் துன்பம் நீங்கி

இன்பம் பெற்று உய்யும் வண்ணம், தன்கடந்த நிலையான அருவநிலையிலிருந்து இறங்கி, இப்பூவுலகத்தில் ஆங்காங்குள்ள பல தலங்களில் உருவத்திருமேனி கொண்டு எழுந்தருளியிருந்து பக்தியுடன் வழிபடும் அடியார்களுக்கு அருள்செய்து வருகின்றான். அத்தகைய சிறப்பிடங்களே ஆலயங்கள் ஆகும். பசுவின் உடல் முழுவதும் பால் மறைந்திருந்தபோதிலும், மடியின் மூலமாகவே பால் வெளிப்படுவதுபோலவும், சூரியன் எங்கும் பரவியிருந்தபோதிலும், பளிங்குக் கல்லின் (Lens) மூலமே கிரணங்கள் விரைவில் வெளிப்படுவது போலவும், நிலத்துக்கடியில் நீர் இருந்தபோதிலும் தோண்டிய இடத்தில்தானே நீர் தோன்றுவதுபோலவும், இறைவன் எங்கும் வியாபித்திருந்தபோதிலும், பெரியோர்கள் அமைத்த ஆலயங்களில் உள்ள மூர்த்திகளின் மூலமாகவே இறைவன் வெளிப்பட்டு அன்பர்களுக்கு அருள் செய்வான்.

"இருஞ்சுரபிக் கெங்கும் உருக்காண ஒண்ணாத
பால் முலைப்பால் விம்மி ஒழுகுவதுபோல வெளிப்பட்
டருள்வன் அன்பர்க்கே"

— **சிவஞான சித்தியார்**

*"எங்கும் சிவனிருப்பன் ஆனாலும் ஏசற்ற*
*சங்கமத்தும் சற்குருவின் தன்னிடத்தும்—லிங்கத்தும்*
*ஆவினுடம் பெல்லாமும் ஆவரித்து நிற்கினும்பால்*
*பாவுமுலைக் கண்மிகுதிப் பார்."*

— **சிவஞானப்பிரகாச வெண்பா**

இவ்வாறு புறத்தே கோயில்கொண்டு விளங்கும் இறைவன், பக்தியுடன் வழிபடும் அடியார்களின் உள்ளத்தையும் கோயிலாகக் கொண்டு அருள் செய்கிறான்.

ஆதலின் பெறுதற்கருமையான மனிதப் பிறவியைப் பெற்றவர் அனைவரும் கோயில்களில் குடிகொண்ட பசுபதியாகிய பரமனை அன்பினால் வழிபட்டு, அவன் வகுத்த நன்னெறியில் சென்று அவனருளைப்



பெறமுயலுதல் சிறந்த கடமையாகும். "மானுடப் பிறவிதான் வகுத்தது மனவாக்காயத்து ஆனிடத்தைந்தும் ஆடும் அரன்பணிக்காக அன்றோ" என்று ஆன்றோரும் கூறியுள்ளார்.

நமது முன்னோர்களின் நாகரீக வாழ்வுக்கு எடுத்துக்காட்டாக விளங்குவன முன்னோர்கள் எடுப்பித்த திருக்கோயில்களாகும். இவைகள் பக்தியை உண்டாக்கும் இடங்களாவதன்றிப் பெருஞ் சிற்பங்கள் நிறைந்த பேரிடங்களும் ஆகும். மேலும் மின்சார அணுக்கள் நிறைந்துள்ள இடம் (Power House) போலத் திருவருள் அணுக்கள் செறிந்துள்ள சிறப்பிடங்களாகும். எழுத்தின் ஒலிவடிவை உணர்த்துதற்கு வரிவெழுத்து அமைந்ததுபோலக் கட்புலனால் காணமுடியாத கடவுளைக் காட்டும் சாதனங்களாக — சட்டகங்களாக விளங்குகின்றன. இவைகளை நம் முன்னோர்கள் தம் உயிரினும் மேலாகப் பாதுகாத்துப் பின் வழியினராகிய நமக்கு அருஞ் செல்வங்களாக வைத்துச் சென்றார்கள். நாட்டின் நலத்துக்கும், மக்களின் நல்வாழ்வுக்கும் கோயில்கள் இன்றியமையாதன. வாழ்க்கைக் கடலில் அகப்பட்டுத் துன்புறும் மக்களுக்குக் கோயில்கள் கலங்கரை விளக்கங்களாக (Light House) விளங்குகின்றன. "கோயில் விளங்கக் குடி விளங்கும். ஆலயந் தொழுவது சாலவும் நன்று" என்பவை ஆன்றோர் கூறிய அனுபவ மொழிகளாகும்.

தென்னாடாகிய தமிழ் நாட்டில் பெருமான் உறையும் கோயில்கள் பல உள்ளன. அவை சிவன் கோயில்கள், முருகன் கோயில்கள், திருமால் கோயில்கள், அம்மன் கோயில்கள் முதலியன. இவைகளில் அந்தந்த சமயத் தலைவர்களால் பதிகம் பாடப்பெற்ற தலங்களும், பெயர்மட்டும் குறிக்கப்பெற்ற வைப்புத் தலங்களும், தல புராணங்களைக் கொண்ட கோயில்களும், தனிப்பாடல் பெற்ற தலங்களும், பிற்காலத்தில்

பக்தர்களால் அமைக்கப்பெற்ற அபிமானத்தலங்களும் அடங்கியுள்ளன.

இந்தப் பிரிவுகளைக்கொண்ட தலங்களுள் திருக்களாவுடையார் கோயிலும் ஒன்றாகும். இதன் பெருமைகளை ஆராயும்போது இது தேவாரம்பெற்ற தலங்களுள் ஒன்றாகவேனும், வைப்புத்தலங்களுள் ஒன்றாகவேனும் இருந்திருக்கவேண்டும். இது தற்போது **உடையார் கோயில்** என்று வழங்குகிறது. ஊர்ப்பெயரும் இதே பெயரில் வழங்குகிறது. வடமொழியில் கரவிந்தேஸ்வரம் என்பது கரவந்தீஸ்வரம் என வழங்குகிறது.

எப்போதும் வற்றாத நீர்ப்பெருக்கையுடைய காவிரி நதி பாயும் நாடு சோழநாடு. இதற்கு வளவநாடு, சென்னிநாடு, அபயநாடு, கிள்ளிநாடு, செம்பியர் நாடு, அகளங்க நாடு, பெருநீர் நாடு, பொன்னிநாடு முதலிய பெயர்களும் வழங்கும். "சோழ நாடு சோறுடைத்து" என்னும் பழமொழியைப் பெற்றது. இந்த நாட்டின் பெருமையை மகா வித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் பின்வருமாறு காட்டுகிறார்.

"பூவினுள் பதுமம்போலும் புருடருள் திருமால்போலும்
காவினுள் கற்பம்போலும் கலைகளுள் ஞானம்போலும்
ஆவினுள் சுரரான்போலும் அறத்துள் இல்லறமே
போலும்
நாவினுள் மெய்ந்நாப்போலும் நாட்டினுள் சோழநாடு"

இத்தகைய பெருமைகளையுடைய சோழ நாட்டில் மேலத்தஞ்சாவூர் ஜில்லா, பாபநாசம் தாலூகாவில் தஞ்சாவூர் — திருவாரூர் புகைவண்டி மார்க்கத்தில் அம்மாபேட்டை ரயில் நிலையத்திலிருந்து சுமார் ஒரு மைல் தூரத்தில் வடமேற்கில் உடையார்கோயில் என்னும் இத்தலம் உள்ளது. தஞ்சாவூர்—மன்னார்குடி மோட்டார் வண்டி மார்க்கத்தில், சாலியமங்கலத்திற்கும் அம்மாபேட்டைக்கும் நடுவில், பாதைக்குத்



தெற்கில் ஒரு பர்லாங்கு தூரத்தில் உள்ளது. இத்தலத்தின் பழைய பெயர் திருவிறையான்குடி என்பது. களாமரத்தை உடையவராகிய இறைவர் எழுந்தருளியிருப்பதால் உடையார்கோயில் என்றும், திருஇறையான்குடி என்றும் பெயர்கள் வழங்குகின்றன. மேலும் இத்தலத்திற்கு கரவிந்தவனம், கரவிந்தபுரம், பிரம்மபுரி, சதுர்வேதபுரி, பர்வபுரம், பூமிபுரம் முதலிய பெயர்களும் வழங்குகின்றன. களாமரத்தையுடையதால் கரவிந்தவனம், கரவிந்தபுரம் என்றும், பிரமன் தவம் செய்ததால் பிரம்மபுரி என்றும், நான்கு வேதங்களும் வழிபட்டதால் சதுர்வேதபுரி என்றும் பிரம்ம பீடத்திற்குமேல் மூலலிங்கத்தைக் கண்டதால் பர்வபுரம் என்றும், பூமிதேவி தவம் செய்ததால் பூமிபுரம் என்றும் பெயர்கள் வழங்கலாயின. ஒரு காலத்தில் இப்பக்கம் களாச்செடிகள் நிறைந்திருந்ததாகவும், மண்வெட்டியால் தோண்டும்போது ஓர் லிங்கம் வெளிப்பட்டதாகவும், லிங்கத்தின் உச்சியில் அடையாளம் இருந்ததாகவும் சொல்லப்படுகிறது. இத்தலத்திற்குக் கிழக்கில் புத்தூரும், தெற்கில் பரிதிநியமும், மேற்கில் சாலியமங்கலமும், வடக்கில் அவளிவள் நல்லூரும் எல்லைகளாக உள்ளன. வடவாற்றிலிருந்து பிரிந்துவரும் புத்தூர் வாய்க்கால், கோயிலுக்கு வடக்கில் ஓடுகிறது. இதனால் பல நிலங்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. இவ்வூரில் ஜில்லா போர்டைச் சேர்ந்த இரண்டு தொடக்கப் பள்ளிக்கூடங்களும், தபால் நிலையமும் உள்ளன. பஞ்சாயத்து முறையில் ஊராட்சி நடைபெறுகிறது. ஜனத்தொகை சுமார் 2000. ஊரும் கோயிலும் மிகப் பழமையாய்க் காணப்படுகிறது. உடையார்கோயில் என்னும் ஊரும், கோயிலும் தற்போது கீழக்கோயில்பத்து என்னும் பகுதியில் சேர்ந்துள்ளன.

இந்த ஜில்லாவில் திருச்சேறை என்னும் தலம் ஒன்றுள்ளது. அதற்கும் உடையார் கோயில் எனப் பெயர் வழங்குகிறது.

## 2. கோயிலின் அமைப்பு

மருதநிலமாகிய நன்செய் நிலங்களுக்கு நடுவில் கோயில் அமைந்துள்ளது. திருப்புகலூர்க் கோயிலைப் போலக் கோயிலைச் சுற்றி நான்கு புறத்திலும் திருக்குளம் உள்ளது. இது திரிபுவன மாதேவிப் பேரேரி என்று வழங்குகிறது. கோயில் கிழக்கு நோக்கியுள்ளது. மூன்று பிராகாரங்களையுடையது. முன் கோபுரம் 5 நிலைகளைக் கொண்டது. இதன் உயரம் 51 அடி. உள் கோபுரம் 2 நிலைகளையுடையது. உள் பிராகாரத்தில் மேற்கு வரிசையில் முக்குறுணிப் பிள்ளையார், பிரம்ம புரீஸ்வரர், ஆனந்தபுரீஸ்வரர், இரட்டைப் பிள்ளையார், முருகன் சந்நிதி, வேதபுரீஸ்வரர், சதுர்வேதபுரீஸ்வரர், கஜலட்சுமி, பூலோகநாதர் முதலிய சந்நிதிகள் உள்ளன. வடக்கில் திருக்களா மரமும், சண்டிகேஸ்வரர் சந்நிதியும் இருக்கின்றன. கிழக்கில் வாகன மண்டபம், மடைப்பள்ளி இடங்கள் உள்ளன. உள் மண்டபத்தில் மூலவர் கிழக்கி நோக்கியுள்ளார். அம்மன் சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது, இதற்கு நேராக உக்கிர சாந்தி விநாயகர் சந்நிதி உள்ளது. அம்மனுடைய உக்கிரத்தை—கோபத்தைத் தணிப்பதற்காக அமைக்கப் பெற்றுள்ளது. உள் மண்டபத்தில் சோமாஸ்கந்தர் முதலிய உற்சவச் சிலைகள் உள்ளன. 2-ம் பிரகாரத்தில் தெற்கில் நந்த வனம் உள்ளது. கோயிலுக்கு வெளியில் வசந்த மண்டபம் தெற்கு நோக்கியுள்ளது. கோயிலுக்கு எதிரில் திருக்குளமும், படித்துறையும், விநாயகர், முருகர் முதலிய சந்நிதிகளும் உள்ளன. குளத்துக்கு வெளியே தேரோடும் வீதியுள்ளது. மூலவர் விமான மண்டபத்தைச் சுற்றிலும் தட்சிணாமூர்த்தி, லிங்கோற்பவமூர்த்தி, பிரம்மன் முதலிய சிலைகள் உள்ளன. கோயிலின் சுற்றளவு கிழமேலடி நீளம் 243 அடி. தென்வடலடி அகலம் 166 அடி. பரப்பு 40338 சதுர அடி. கோயிலின் அமைப்பைக் காட்டும் படம் தனியே உள்ளது.



## 3. மூர்த்திகளின் பெயர்கள்

இத்தலத்துப் பெருமானுக்குத் திருக்களாவுடையார் என்ற பெயர் வழங்குகிறது. களா மரத்தின் நிழலில் எழுந்தருளியிருப்பதால் இப்பெயர் ஏற்பட்டது. கல்வெட்டுக்களில் இறைவர், திருக்களாவுடையார், திருக்களாவுடைய நாயனார், உலகுடைய பெருமான், உலகுடைய நாயனார், தேவர் என்னும் பெயர்கள் வழங்குகின்றன. வடமொழியில் **கரவிந்தேஸ்வரர்** என்னும் பெயர், கரவந்தீஸ்வரர் என்று மருவி வழங்குகிறது. கரவிந்தம் என்பது களா மரத்தைக் குறிக்கும். அம்மன் பெயர் தர்மவல்லி என்பது. தர்மமே படர்கொடியாக விளங்குபவள். விநாயகரின் பெயர் நர்த்தன கணபதி என்பது. உடையார் என்னும் பெருமான் பெயராலேயே உடையார் கோயில் என்னும் ஊர்ப்பெயரும் அமைந்துள்ளது. கரவிந்தபுரம் என்னும் ஓர் சிற்றூரும் உள்ளது. தலவிருட்சம் — திருக்களாமரம். இப்போதும் ஓர் செடி சண்டிகேஸ்வரர் சந்நிதிக்குப் பக்கத்தில் உள்ளது. களாச்செடிகளில் சிறுகளா, பெருங்களா, மலைக்களா என்ற வகைகள் உண்டு. அவைகளில் இத்தலத்தில் உள்ளது சிறுகளாச்செடி. களாமரத்தைக் கொண்ட மற்றோர் தலம் பாண்டி நாட்டில் உள்ள திருக்கருவை என்னும் கரிவலம் வந்தநல்லூர் ஆகும்.

## 4. தீர்த்தங்கள்

1. **திருக்குளம்:** இது கோயிலைச் சுற்றி நான்கு புறமும் சூழ்ந்துள்ளது. இதற்குத் திரிபுவன மாதேவிப் பேரேரி, வேதபுட்கரிணி, வேத தீர்த்தம் முதலிய பெயர்கள் உண்டு. ரிக், யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களும், நான்கு தீர்த்தங்களாக, கோயிலின் நான்குபுறமும் சூழ்ந்துள்ளன. கோயிலுக்கு முன்னே உள்ளது ரிக்வேத தீர்த்தம்.

இதில் பங்குனிமாதப் பூரணை நாளில் ஸ்நானம் செய்தால் மிக்க புண்ணியம் உண்டு. தெற்கே உள்ளது யசுர்வேத தீர்த்தம். இதில் ஆனிமாதம் வளர்பிறையில் அட்டமித் திங்கள் நாளிலும், சூரிய - சந்திர கிரகண காலங்களிலும் ஸ்நானம்செய்து வழிபட்டால் மிகுந்த செல்வம் பெறுவார்கள். மேற்கில் உள்ளது சாம தீர்த்தம். இதில் திருவாதிரை நாளிலும், பௌர்ணமி, அமாவாசை நாட்களிலும் ஸ்நானம் செய்தால் ஞானத்தை அடைவார்கள். வடக்கில் உள்ளது அதர்வண தீர்த்தம். இதில் ஸ்நானம் செய்தால் சகல பேறுகளையும் பெறுவார்கள். சந்ததிகளுக்கும் நன்மை உண்டு. நாட்டில் உள்ள இரண்டு முக்கிய தீர்த்தங்களில் ஒன்று இந்த வேததீர்த்தமாகிய திருக்குளம், மற்றொன்று ராமேஸ்வரம் என்பர். எனவே இந்த வேத தீர்த்தத்தில் நீராடிப் பஞ்சாட்சரமென்னும் ஐந்தெழுத்தை ஜபிப்போர் எல்லாத் துன்பங்களிலிருந்தும் விடுபட்டு இன்பம் அடைவர். இந்தத் தீர்த்தத்தில் அத்திரி முதலிய முனிவர்களும் இக்ஷ்வாகு அரசர்களும். சந்திரவம்சத்து புரூரவஸ் முதலியோரும், சோழபாண்டியர்களும், ராமலட்சுமணர்களும், பாண்டவர்களும், நீராடி வழிபட்டுப் பேறுபெற்றுள்ளார்கள்.

இந்தத் தீர்த்தத்தை வலம் வந்தால் பூமியை வலம் வந்தது போலாகும்.

2. **கிணறு:** இது இரண்டாம் பிரகாரத்தில் நந்தவனத்துக்குப் பக்கத்தில் உள்ளது.

3. **புத்தூர் வாய்க்கால்:** இது கோயிலுக்கு வடபுறம் ஓடுகிறது. வடவாற்றிலிருந்து பிரிந்து வரும் கிளை நதி. சாகுபடிக்கு மிகவும் பயன்படுகிறது.

" மூர்த்திதலம் தீர்த்தம்முறையாய்த் தொடங்கினர்க்கோர்
வார்த்தை சொலச்சற் குருவும் வாய்க்கும் பராபரமே"

— **தாயுமானவர்**



## 5. தலப்பெருமைகள்

இத்தலம், மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றிலும் பெருமையுடையது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நால்வகை நிலங்களுள் மருத நிலமாகிய நன்செய் நிலங்களுக்கு நடுவில் கோயில் அமைந்துள்ளது. சுற்றிலும் திருக்குளம் அமைந்து, கோயில் ஒரு தீவைப்போல் உள்ளது. கோயிலை அடுத்துச் சோலைகளும், வாவிகளும், சிற்றாறுகளும், சூழ்ந்துள்ளன. புதுமையான நாகரிகம் மிகுந்துவரும் இக்காலத்தில் கோயில் மிகப் பழமையானதாகக் காணப்படுகிறது. நகர வாழ்க்கையில் மனஅமைதி பெறமுடியாமல் அல்லற்படும் மக்களுக்கு மன அமைதியை உண்டாக்கும் மாண்பதியாய் உள்ளது. எப்போதும் நீர்வளமுள்ளது. திரிபுவன மாதேவிப்பேரேரி என்னும் திருக்குளத்தையுடையது. களாச்செடியைத் தல விருட்சமாகக் கொண்டது. இதனாலேயே திருக்களாவுடையார் என்னும் பெயர் இறைவனுக்கு ஏற்பட்டது. பொதுவாகக் களாக்காயை ஊறுகாயாக உபயோகிப்பது வழக்கம். உண்ட உணவை ஊறுகாய் செரிக்கச் செய்யும். அதுபோலக் களாவின் நிழலில் அமர்ந்த பெருமான், அடியார்களின் தீவினைகளை — பாவங்களை நசிக்கச் செய்யும் தன்மையுடையவராக விளங்குகிறார். தேவி தர்மவல்லியாக — அறங்கள் படரும் கொடியாக விளங்குகிறாள். பலவகையான மூர்த்திகள் லிங்கவடிவாக அமைந்துள்ளன. கோயில் பெயரும், ஊர்ப்பெயரும் ஒரே பெயரில் அமைந்துள்ளன. பல கல்வெட்டுக்களையுடையது. அவைகளில் இராசேந்திர சோழனுடைய காலத்துக் கல்வெட்டும் இருப்பதால், இத்தலம் 10-ம் நூற்றாண்டிலிருந்தே பிரசித்தி பெற்றிருந்ததாகத் தெரிகிறது. இத்தலம் கரவிந்தவனம் முதலிய வேறுபல பெயர்களையும் பெற்றுள்ளது.

இனி புராண வரலாற்றின்படி இத்தலத்தில் பலர் வழிபட்டுப் பேறு பெற்றிருக்கிறார்கள். துர்வாச

முனிவரால் இந்திரனுக்கேற்பட்ட சாபம் நீங்கப் பெற்றது. பிரமன் இத்தலத்தில் வேத தீர்த்தத்தில் நீராடிப் பெருமானை வழிபட்டுத் தன் படைப்புத் தொழிலை மீண்டும் பெற்றான். மலயத்துவஜன் என்னும் மன்னன், தன் குருவினால் ஏற்பட்ட சாபம் நீங்கப்பெற்றான். விதர்ப்பன் என்னும் மன்னன் வேட்டையாட வந்தபோது களாச்செடியின் அடியில் இருந்த லிங்கத்தைக் கண்டு வழிபட்டு, மற்றவர்களையும் குடியேற்றி வாழவைத்தான். இதனால் இத்தலத்திற்கு பர்வபுரம் என்ற பெயரும் ஏற்பட்டதாகக் கூறுவர். பூமிதேவி — நிலமகள் தவம்செய்து பெருமானை வழிபட்டு பாவிகளைச் சுமக்கும்படியான பாவத்தினின்றும் வழிபட்டுப் பேறு பெற்றாள். சுவரதன் என்ற அரசன் வழிபட்டு தனக்கு தேவசர்மன் என்ற அந்தணனால் ஏற்பட்ட சாபம் நீங்கப் பெற்றான். வீரசோழன் என்பவன் பசுவைக் கொன்றதால் ஏற்பட்ட பாவத்தினின்றும் விடுபட்டான். இந்திரன் வழிபட்டு கௌதம முனிவரால் ஏற்பட்ட பாவத்தினின்றும் நீங்கப் பெற்றான். சுவரதன் என்ற அந்தணன் பிரமச்சரியத்தில் நின்று குருவுக்கு வழிபாடு செய்து, பிறகு இல்லறத்திற் சென்று மனையாளுடன் பல தலங்களுக்கும் சென்று வழிபட்டு முடிவில் இத்தலத்திற்கு வந்து வழிபட்டுப் பேறு பெற்றான். நாரதர் இந்திரனுக்கு இத்தலத்துப் பெருமைகளையும், செய்யவேண்டிய கடமைகளையும், வேத தீர்த்தத்தின் சிறப்புக்களையும், அவற்றில் நீராடவேண்டிய முறைகளையும் உபதேசித்தது. இவ்வரலாறுகள் பின்னை விரிவாகக் காட்டப்பெறும். எனவே இத்தலம் புராணப் பெருமைகளையும் கொண்டு விளங்குகிறது.

## 6. திருப்பணிகள்

முன்னோர்கள் ஏற்படுத்திய பல பெருமைகளையுடைய கோயில்களுக்கு எவ்வித தீங்கும் நேராதபடி அவ்வப்பொழுது ஆவன செய்யவேண்டும். புதிய



தோர் ஆலயத்தை அமைப்பதைப்பார்க்கிலும், பழமையான கோயிலைப் புதுப்பித்தல் மிக்க புண்ணியத்தைத் தரும் என்பர்.

*“ மாதவர் மடங்களாதி வரதன் மந்திரங்களாதி*
*நாதமா மிலிங்கமாதி களினபுட் கரணியாதி*
*சேதமுற்றிடின் முன்போல் செய்பவர்க் குறுபலன்தான்*
*ஓதுமுன் செய்தோர்தம்மில் ஆயிரங் குணிதமோங்கும்”*

— சிவபுண்ணியத்தெளிவு

மேலும் கோயில்களில் பூஜை முதலியன நடைபெறாமல் முட்டுப்பாடு ஏற்பட்டால் நாட்டுக்குத் தீங்கு உண்டாகும் என்பர். “முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடின் மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும் கன்னங் களவு மிகுத்திடும் காசினி, என்னரு நந்தி எடுத்துரைத்தானே” என்று திருமூலர் கூறுகிறார். எனவே இக்கோயிலில் அவ்வப்போது திருப்பணிகள் நடந்து வந்திருக்கின்றன. அம்மன் கோயில் கர்ப்பக்கிரகத்துக் கீழ்புறச் சுவரில் சிதம்பரஞ் செட்டியார் முதலியவர்களுடைய பெயர்கள் காணப்படுவதால், அக்கோயில் அவர்களால் கட்டப்பட்டிருக்கலாம் எனத் தெரியவருகிறது. சில ஆண்டுகளுக்கு முன் தஞ்சை ரிட்டயர்டு டிப்டி-கலெக்டர், திரு. O. N. ராமசுவாமி ஐயர் அவர்களின் தலைமையில் திருப்பணி நிர்வாகக்குழு அமைக்கப்பட்டுள்ளது. உள் மதில் சுவர்களுக்கு முட்டுக்கள் அமைத்தும், மண்டபங்களின் தளவரிசை, மேல்தளம் முதலியவைகள் செப்பனிடப்பட்டும். சுப்பிரமணியர் சந்நிதியில் சிமிட் ஓட்டு கொட்டகை இடப்பட்டும் இவ்வாறு திருப்பணிகள் நிறைவேறிக் கும்பாபிஷேகம் நடைபெறாமலிருக்கிறது. மிகப் பழமையான இக்கோயிலில் மேலும் பல திருப்பணிகள் செய்து கும்பாபிஷேகம் நடத்தவேண்டியிருப்பதால் அவைகளை நிறைவேற்றி வைக்கும் வகையில் சிவபுண்ணியச் சீலர்கள் உதவி செய்வார்களாக.

## 7. சிற்பங்கள்.

கோயில் நான்கு பக்கங்களிலும் குளம் சூழ்ந்து தீவுபோன்றுள்ளது. இக்கோயிலில் ஓர் தூணை அடுத்துக் கல் உண்டியல் பெட்டி உள்ளது. நடராஜரின் உருவச்சிலை அழகாக உள்ளது வெளிக்கோபுரம் ஐந்து நிலைகளை உடையது. திருவேகம்படி நங்கையார் என்பவர் இக்கோயிலில் பெரியதேவர், நாச்சியார், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், பரவை நாச்சியார் முதலிய வடிவங்களை அமைத்துக்கொடுத்ததாகத் தெரியவருகிறது.

## 8. தினப்பூஜையும் திருவிழாக்களும்

இக் கோயிலில் தினந்தோறும் காலை, உச்சி, மாலை, இரவு என்னும் நான்கு காலங்களிலும் அபிஷேக ஆராதனைகள் நிகழ்ந்து வருகின்றன. பூஜை நேரங்களில் மண்டபத்தின் மேல் உள்ள மணி அடிக்கப்படும்.

*" காலை தொழ அற்றைவினைக் கட்டகலும் கட்டுச்சி*
*வேலை தொழ இப்பிறப்பில் வெந்துயர்போம்—மாலையினில்*
*வந்து சிவன் தாளை வந்தித்தால் எழ்பிறப்பின்*
*வெந்துயர மெல்லாம் விடும்.*

— சிவதரிசனமகத்துவம்

ஆண்டுதோறும் சித்திரைமாதத்தில் பிரம்மோற்சவம்—பெருவிழா நடைபெறும். சித்திரை வளர்பிறைப் பருவத்தில் மிருகசீரிடநாளில் கொடியேற்றமும், பூரநாளில் தேரோட்டமும், சித்திரைநாளில் தீர்த்தவாரியும் நடைபெறுவதுண்டு. ஆனால் தற்போது திருவிழா நடைபெறுவதில்லை. மாதாந்திர விழாக்கள் மட்டும் அவ்வப்போது நிகழ்ந்து வருகின்றன. வைகாசி விசாகநாளில மூர்த்திகள் புறப்பட்டு வெளிவீதியில் உலாவரும். மற்றும் ஆடிப்பூரம்,



புரட்டாசியில் நவராத்திரி விழாவும், ஐப்பசியில் கந்தர் சஷ்டி விழாவும், கார்த்திகை சோமவாரங்களிலும், ஞாயிறு நாட்களிலும் புறப்பாடு நிகழும். மார்கழித் திருவாதிரை நாளில் நடராஜப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் நிகழும்.

*" மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்*
*அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்*
*கண்ணினால் அவர் நல்விழாப்பொலிவு கண்டார்தல்"*

என்னும் பெரிய புராணப் பாடலின்படி மனிதராய்ப் பிறந்தவர் அனைவரும், பெருமானுக்கு நடைபெறும் திருவிழாக்களைக் கண்டு அருளுக்குப் பாத்திரர் ஆகும்படி ஒழுகுதல் நலமாகும்.

## 9. வருமானமும் சொத்துக்களும்

இக் கோயிலுக்கு நன்செய், புன்செய் நிலங்களாக சுமார் 80 ஏகர் 20 செண்ட் நிலங்கள் உள்ளன. இவைகள் பாபநாசம் தாலூகா கீழக்கோயில்பத்து, வடபாதி, சூழியக்கோட்டை முதலிய கிராமங்களில் உள்ளன. நாகை தாலூகாவில் மேல ஒதியத்தூர் நிம்மேலி கிராமங்களில் 60 வேலி மேல்வார உரிமை உண்டு. இவைகளின் குத்தகை மூலமாயும், மனை வாடகை, தோப்பு, உண்டியல், பாசிக்குத்தகை மூலமாயும் ஆண்டுதோறும் சுமார் பத்தாயிரம் ரூபாய் வருமானம் வரும். அரசியலார் மூலம் மோகினித் தொகை ரூ. 22—14—7 கிடைக்கிறது.

## 10. நிர்வாகம்

இக் கோயிலின் நிர்வாகம் ஆதியில் தஞ்சை தேவஸ்தானக் கமிட்டியாரின் மேற்பார்வையில் இருந்து வந்தது. பிறகு 1942-ல் ஏற்பட்ட (Scheme) திட்டப்படி (B O. 248 A. 21—1—42) அறநிலையப் பாதுகாப்பு இலாகாவின் (Hindu Religious and Charitable Endowments) நேர் நிர்வாகத்தில் இருந்து வருகிறது. அறநிலையத்தாரால் நியமிக்கப்

பெற்ற நிர்வாக அதிகாரியும், தர்மகர்த்தரும் கோயில் காரியங்களைக் கவனித்து வருகிறார்கள்.

## 11. கல்வெட்டுக்கள்

இக் கோயிலின் பழமையைத் தெரிவிப்பதற்குச் சுவாமி கோயிலின் விமானச் சுவர்களில் 10 கல்வெட்டுக்கள் உள்ளன. இவைகள் 1902-ல் சர்க்காரால் நகல் எடுக்கப்பெற்றுத் தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகளில் 399 முதல் 408 வரையிலுள்ள எண்களாகப் பதிவு செய்யப்பெற்றுள்ளன. இக்கல்வெட்டுக்களின் விவரங்கள் பின்வருமாறு :—

1. (399—02) கரவந்தீஸ்வரர் கோயிலின் தென்புறச் சுவரில் "ஸ்வஸ்திஸ்ரீ புகழ் சூழ் தென்புணரி" என்று தொடங்கும் கல்வெட்டில், ராஜகேசரிவர்மன் திரிபுவனச் சக்ரவர்த்தி ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவனது 16-வது ஆட்சியாண்டில் நித்த விநோத வளநாட்டு — விரசோழ வளநாட்டுப் பிரமதேயம்—சதுர்வேதி மங்கலத்துப் பெருங்குறி மகாசபையோரால், அமரபட்சம் வியாழக்கிழமை நவமி, உத்திராட நாளில் திருக்களாவுடைய மகாதேவர்க்கு இறையிலியாக - (வரியில்லாமல்) நிலங்களும், பொற்காசுகளும் வழங்கப்பெற்றன.

2. (400) ஷை இடத்தில் "பூமாது புணர புவிமாது வளர" என்று தொடங்கும் முடிவு பெறாத கல்வெட்டில், முக்கொக்கிழானடிகளொடு வீற்றிருந் தருளிய திரிபுவனச் சக்கரவர்த்தி ஸ்ரீவிக்கிரம சோழனது 8-வது ஆண்டில் கோயிலுக்கு நிலம் வழங்கப்பெற்றது

3. (401) ஷை இடத்தில் "பூமன்னு பதுமம் பூத்த" என்று தொடங்கும் கல்வெட்டில் ஸ்ரீ குலோத்துங்க சோழனது 14-வது ஆண்டில், நவமி-வியாழக்கிழமை, ஆயிலிய நாளில், நித்த விநோத வளநாட்டு - விரசோழ வளநாட்டுத் திருக்களாவுடையார்க்குத் திருநொந்தா விளக்கு, (அணையா விளக்கு எரிக்க நிலம் கொடுத்தது.

4. (402) ஷை இடத்தில் "கோ இராஜகேசரி பன்மரான" என்று தொடங்கும் கல்வெட்டில் திரிபுவனச் சக்கரவர்த்தி ஸ்ரீ ராஜாதி ராஜ தேவரின் 10-வது ஆண்டில்



பெருங்குறி சபையார், திருப்பாற் கடலாழ்வார் கோயிலில் கூடி திருக்களாவுடையார்க்குத் திருநொந்தா விளக்கெரிக்க நிலமும் பொற்காசுகளும் வழங்கியது.

5 (403) ஷை இடத்தில் "திருமன்னி வளர இருநில மடந்தையும்" என்று தொடங்கும் கல்வெட்டில் பரகேசரி வன்மரான ஸ்ரீ ராஜேந்திர சோழதேவரின் 31-வது ஆண்டில் நித்த விநோத வளநாட்டுத் திரிபுவன மாதேவிச் சதுர்வேதி மங்கலத்துச் சபையார் வெள்ளிக்கிழமை புனர்பூச நாளில் இறையிலியாக நிலம் வழங்கியது.

6. (404) கோயிலின் மேல் புறச் சுவரில் "பூமாது புணர புவிமாது வளர" என்று தொடங்கும் கல்வெட்டில், திரிபுவனச் சக்கரவர்த்தி ஸ்ரீ விக்கிரம சோழ தேவரின் 15-வது ஆண்டில், வியாழக்கிழமையில் ஆதூர்க் கூற்றத்துச் சிற்றூலக்குருடையான் திருக்களாவுடையார்க்குத் திருநொந்தா விளக்கெரிக்கவும், பஞ்சக்கொடுமையைப் போக்கவும், பெருங்குறி மகாசபையார் மூலம் இறையிலியாக நிலமும், பொற்காசுகளும் வழங்கியது. இவ்வரசன் காலத்தில் கொடும் பஞ்சம் ஏற்பட்டதாகத் தெரிகிறது. "இக்காச பதின் மூன்றும் இவ்வாவணி மாசத்து இப்படிக் கொள்ள வேண்டித்துக் காலப்பொலாங்கைப் பரிகரித்துக் கொண்டு ஊரார் இரக்ஷித்துக் கொடுக்கைக்காக" என்ற வரிகள் பஞ்சத்தைத் தெரிவிக்கின்றன. இக்கல்வெட்டின் நகல் பின்னே தரப்பெற்றுள்ளது.

7. (405) கோயிலின் வடபுறச் சுவரில் "பூமன்னு பதுமம் பூத்த ஏழுலகும் தாமுன் செய்தவத்தால்" என்று தொடங்கும் கல்வெட்டில், ராஜகேசரிவர்மன் ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவனது 4-வது ஆண்டில் நித்த விநோத வளநாட்டு - விரசோழவள நாட்டில் அமரபட்சம் திங்கட்கிழமை சதுர்த்தி ரேவதி நாளில் ஸ்ரீ முடி கொண்ட சோழ விண்ணகராழ்வார் கோயிலில் பெருங்குறி மகாசபையார் கூடித் திரிபுவனமாதேவிப் பேரேரியுள் எழுந்தருளியிருக்கும் திருவிளையான்குடி திருக்களாவுடைய மகாதேவரின் திருநாளுக்கும், அடியார்க்குச் சோறிடுவதற்கும் இறையிலியாக (வரியில்லாமல்) நிலமும், பொற்காசுகளும் வழங்கியது. இதில் அக்காலத்திலிருந்த அந்தராயம்

சில்வரி, பெருவரி, வெள்ளான் வெட்டி முதலிய வரிகள் சொல்லப்பட்டுள்ளன.

8. (406) ஷை இடத்தில் "திரிபுவனச் சக்ரவர்த்தி ஸ்ரீஇராசேந்திர சோழ தேவர்க்கு" என்று தொடங்கும் கல்வெட்டில் ஷை அரசனது 8-வது ஆண்டில், மீன ஞாயிற்றுப் பூர்வபட்சம் - பஞ்சமி - சனிக்கிழமை - உரோகிணி சேர்ந்த நாளில், சதுர்வேதி மங்கலத்தார், ஆலூர்க் கூற்றத்துத் திருக்களாவுடையார் கோயிலுக்குப் பிராண உபகாரி நல்லூரில் இறையிலியாக - வரியில்லாமல் நிலம் வழங்கியது.

9. (407) ஷை இடத்தில் "பூ மருவிய திருமாதும் புவிமாதும் ஜயமாதும்" என்று தொடங்கும் கல்வெட்டில் புவன முழுதுடையாளொடும் வீற்றிருந்தருளிய திரிபுவனச் சக்ரவர்த்தி - ஸ்ரீராஜ ராஜ தேவரின் 6-வது ஆண்டில், வீரசோழ வளநாட்டுச் சதுர்வேதிமங்கலத்துப் பெருங்குறி மகாசபையார், திருக்களாவுடையார் கோயிலில் நந்தா விளக்கெரிக்கவும், மகாதேவர் திருச்சாந்து சாத்தும்போதும் திருவிழா நாட்களில் யாக மண்டபத்தில் எழுந்தருளியிருக்கப் பண்ணவும், புண்ணிய யாகம் பண்ணவும், பாண்டி குலாசனி வளநாட்டு ஆற்காட்டுக் கூற்றத்தில் இறையிலியாக நிலம் வழங்கியது.

10. (408—02) ஷை இடத்தில் உள்ள கல்வெட்டில் ஓர் வெண்பா உள்ளது.

> "தண்டீச்சரன் ஓலை சாகரம் சூழ் வையத்து
> கண்டீச் சரன் கருமம் ஆராய்மின்—பண்டே
> அறஞ்செய்தான் செய்தான் அறங்காத்தான் பாதம்
> திறம்பாமல் சென்னிமேல் வைத்து"

மதுரையும், ஈழமும், பாண்டியன் முடித்தலையும் கொண்டருளின ஸ்ரீகுலோத்துங்க சோழதேவரின் 18-வது ஆட்சியாண்டில், உலகுடைய நாயனார்க்குச் சிலாலம் பீடம் சாத்தாமலிருந்து, கொடியூர்ப்பட்டணத்துக் கிள்ளியூர் மலையினின்றும் சிலை கொண்டு வந்து பீடம் செய்து சாத்தப் புகும்போது சைவாச்சாரியர்களால் சாத்தமுடியவில்லை. பிறகு நித்த விநோத வளநாட்டுக் கிழார் கூற்றத்து நிவரம்பூர் உடையான் தேவனை உதயதிவாகர



ஆச்சாரியனும் அவன் மக்களும் பீடம் சாத்தினமையால் அதற்காக இறையிலி நிலம் வழங்கியது.

11. மகாமண்டபத்தின் மேல்புறச் சுவரில் உள்ள மற்றொரு கல்வெட்டு "ஸ்வஸ்திஸ்ரீ எம்மண்டலமும் கொண்டருளிய" என்று தொடங்கும் கல்வெட்டில் ஸ்ரீகுலசேகர பாண்டியதேவரின் 38-வது ஆண்டில், மீன ஞாயிற்றுப் பூர்வ பட்சத்துச் சோதி நாளில், ராஜராஜ வளநாட்டு இராசமகேந்திரன் நியாக ஸமுத்திரச் சதுர்வேதி மங்கலத்துப் பெருமக்கள் திருக்களாவுடைய நாயனார்க்கு இறையிலியாக நிலம் வழங்கியது. மேலிட்ட கல்வெட்டுக்களில் மாதிரிக்காக ஓர் கல்வெட்டின் (406) நகல் இங்கு காட்டப் பெற்றுள்ளது.

"ஸ்வஸ்திஸ்ரீ பூமரு புயர புவிமரு வரை நாமரு விளங்க ஜயமரு விரும்ப தன் திருப்பதமலர் மன்னவர் சூடு மர்வ உரிமையால் மணிமுடி சூடி செங்கோல் சென்று திசை - யெல்லாம் வளர்த்து கடப்ப இருபடைகளும் ஒரு குடை நிழற்ற செம்பொன் வீர சிம்மாசனத்து திரிபுவன முழுதுடையாளொடும் வீற்றிருந்தருளிய கோப்பரகேசரி பன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீவிக்கிரமசோழ தேவற்கு யாண்டு 16-வது சிம்ஹ நாயற்று - வியாழக்கிழமையும் பெற்ற - பூசம் நாராயண சதுர்வேதி மங்கலத்து மகாசபையோம். இந்நாட்டு ஆலூர்க் கூற்றத்து சிற்றூலத்தார் சிற்றூலத்துடையான் உதயாதித்தச் சூரிய தேவர்—வுடைய மகாதேவர்க்கு திருநந்தா விளக்கு —எங்கள் பக்கல் விலை கொண்டு விட்ட நிலத்துக்கு— விளக்கு சந்திராதித்தவற்—நாங்கள் இறையிலிக்கை இட்டு இட்டுக் கொடுத்த பரிசாவது இச்சிற்றூலத்துடையார் உதயாதித்தர் சூரிய தேவர் திருநந்தா விளக்குக்கு இவர்—கொண்டு விட்ட நிலத்துக்கு இறையிலி செய்து குடுத்து இதுக்காக இவர் பக்கல் கொண்ட காசு பதின்மூன்று இக்காசுபதின் மூன்றுக்கும் காசொன்றுக்கு திங்கள் கால் நிபமம் பலிசையாக இக்காசு பதின்மூன்றுக்கும் இப்ப - காதும் பொலிவதாக இவர் பக்கல் கொண்ட காசு பதின்மூன்று இவ்வாறனை மாசத்து இப்படிக் கொள்ள வேண்டித்து காசு பொலிவாங்கைப் பரிகரித்துக் கொண்டு வாராரிரக்ஷித்துக் கொடுக்கைக்காக

—இக்காசு கொண்டு இத்திருநுந்தா விளக்கு சந்திராதித்தவற் இறையிலி செய்து குடுத்தோம்.—வதிக்கு மேற்கு உய்யக்கொண்டான் வாய்க்காலுக்கு வடக்கு ஐஞ்சாங்கண்ணாற்று முதற் சதிரத்து மேற்கடைய நிலம் ஒருமா. இந்நிலம் ஒருமாவும், சந்திராதித்தவற் திருக்களாவுடைய மகாதேவர் ஆதிசண்டேஸ்வரர்க்கு இறையிலி கைத்திட்டுக்குடுத்தோம். இம்மகாசபையோம். சபையில் பணித்தார் கூத்தாடி பட்டங்—பணியாலும், பெருமருதூர் மாடவலாங் நாராண பட்டங்பணியாலும், பாலாசிரியங் சிரிளங்கோ மாதவ பட்டங் பணியாலும், திருநறையூர் பெரிய நம்பி பட்டங் பணியாலும், திருப்புத்தூர் அழகிய மணவாளங் வடகோபுரமுடையார் பட்டங் பணியாலும், வல்லூர் சீதரநாராயண பட்டங்பணியாலும் கௌணியன் தில்லைக்கார பட்டங்பணியாலும், வலஊர் கூத்தாடி தில்லைக்கூத்தபட்டங் பணியாலும், நெற்குன்றத்து திருச்சிரவுடையாங் பட்டங்பணியாலும், பெருமருதூர் நாராயணன் ஆடவல்லான் பட்டங்பணியாலும், வலவூர் கூத்தாடி இளைய தில்லை கூத்தாடி பட்டங் பணியாலும், பெருமருதூர் இளைய ஆடவல்லாங் பட்டங்பணியாலும், காப்பியன் திருவெண்காடு தேவன் திருவெண்காடு பட்டங் பணியாலும். திருநறையூர் தாமோதரன் நித்த நம்பி பட்டனும் இறுக்கவும் இந்நிலத்துக்கு சில்வரி, பெருவரி, அந்தராயக்காசு, வெள்ளான் வெட்டியும் மற்றும் திருவாசலில் போந்த குடிமை எப்பேர்ப்பட்டதும் இறுக்கவும் செய்யவும் கடவரல்லாதராகவும். அன்றி காட்டுவாரும், காட்டுவிப்பாரும் திருவாணை திரிபுவன முழுதுடையாராணை. இப்படி சம்மதித்து இவ்விறையிலிக்கைத் திட்டுக்குடுத்தோம். இம்மகாசபையோம் இவர்கள் பணிக்க இவ்விறையிலிக்கைத் திட்டு எழுதினேன். சிபூதிஉடையாங்களபுரதேவன் செங்கமலநாதனேன் இவை என் எழுத்து”)

இக் கல்வெட்டுக்களால் அறியப்படும் செய்திகளாவன :—கல்வெட்டுக்கள் ஒவ்வொன்றும் ஸ்வஸ்திஸ்ரீ என்று தொடங்கப்பெற்றிருக்கும். நலம் வளர்க என்பது பொருள். முதலில் அந்தந்த அரசனுடைய மெய்க்கீர்த்திகள்—புகழைத் தெரிவிக்கும் வரிகள் நல்ல செந்தமிழ் மொழியில் பாடலாக அமைந்துள்ளன. தீமைகள் நீங்கி



நன்மைகள் யாவும் வளரும் நிலையில் அரசனது ஆட்சி விளங்கியது என்பதற்கு பின்வரும் வரிகள் உள்ளன.

“மீனமும் சிலையும் சிதைந்து வாலுயர்
பொன்னொடு மேருவில் புலி வீற்றிருப்பவும்
பசிபகையாதியானது தீர்ந்து நீங்கி
மன்னுயிர் தழைப்ப மனுவாறு விளங்க
மாதவர் தவமும் மங்கையர் கற்பும்
ஆதியந்தணர் ஆகுதிக்கனலும்
மீதெழு கொண்டலும் விதிதன்புனலும்
மேதினிவளமும் சாதி ஒழுக்கமும்
நீதி அறமும் பிறழாது நிகழ.”

இத்தலத்திற்குத் திருவிறையான்குடி என்றும், மூலப் பெருமானுக்குத் திருக்களாவுடையார், திருக்களாவுடைய நாயனார், திருக்களாவுடைய மகாதேவர். உலகுடை நாயனார் என்றும், திருக்குளத்துக்குத் திரிபுவனமாதேவிப் பேரேரி என்றும் இவ்வூரிலுள்ள திருமால் கோயிலுக்கு திருப்பாற் கடலாழ்வார் கோயில் ஸ்ரீமுடிகொண்ட சோழ விண்ணகராழ்வார் கோயில், ஸ்ரீபுருஷோத்தம ஆழ்வார் கோயில் என்றும் பெயர்கள் வழங்கி வந்திருக்கின்றன. பல சோழமன்னர்களுடைய ஆட்சிக்காலங்களில் கோயில் வழிபாட்டுக்கும் திருவிழாக்களுக்கும், நந்தா விளக்கெரிப்பதற்கும் (Perpetual Lamp) அடியார்களுக்கு உணவு கொடுப்பதற்கும் இறையிலியாக வரியில்லாமல் நிலங்களும். பொற்காசுகளும் வழங்கப்பெற்றுள்ளன. சோழர்களில் இராசேந்திரனுடைய கல்வெட்டும் இருப்பதால் (1012-1044) பத்தாம் நூற்றாண்டிலிருந்தே இக்கோயில் சீரும் சிறப்பும் கொண்டு விளங்கியதாகத் தெரிகிறது. சோழனுடைய தேவிகளாக முக்கோக்கிழானடிகள், புவனமுழுதுடையாள் முதலிய பெயர்கள் காணப்படுகின்றன. அக்காலத்தில் சுட்டி. சில்வரி, பெருவரி, வெள்ளான் வெட்டி, அந்தராயம், வெட்டி முதலிய வரிகள் இருந்தன சோழர் காலத்தில் மண்டலம், வளநாடு, நாடு, கூற்றம் முதலியனவாக நாடு பிரிக்கப்பட்டிருந்ததென்றும். அவற்றுள் இத்தலப் பகுதி தென்கரை நித்த விநோத வளநாட்டு, வீர சோழ நாட்டு ஆவூர்க்கூற்றத்தைச் சேர்ந்திருந்ததென்றும் தெரிய

வருகிறது. நித்தவினோத வளநாடு என்பது தஞ்சை ஜில்லாவின் கீழ்ப்பகுதியும், பாபநாசம் தாலூகாவின் மேற்குப் பகுதியும், மன்னார்குடி தாலூகாவின் வடக்குப் பகுதியும், அரசலாற்றின் தென்பகுதியும் சேர்ந்த நிலப்பரப்பாகும். இது பத்துப் பிரிவுகளை யுடையது. ஒன்று ஆலூர்க்கூற்றம், மற்றவை காந்தார நாடு, கரம்பை நாடு, கிழார்க் கூற்றம், முடிச்சோழநாடு, நல்லூர் நாடு, பாம்புணிக் கூற்றம். பொய்யூர்க் கூற்றம், வெண்ணிக் கூற்றம், வீரசோழநாடு என்பன. ஓர் பகுதி பாண்டிகுலாசனிவளநாடு என்ற பெயரில் இருந்தது. பாண்டியகுலத்துக்கு இடிபோன்ற சோழனது வளநாடு என்பது பொருள். கடவுளின் பெயரை மக்களுக்கு வைத்து வழங்கிவந்தார்கள். திருக்களாவுடையான் மகன் திருவாய்குலமுடையான், திருநடம்புரிந்தான். தில்லைக்கூத்தன் என்னும் பெயர்கள் மக்களின் பெயர்களாக விளங்கின. கால்வாய்களுக்கு உய்யக்கொண்டான் வாய்க்கால் கங்கைகொண்ட சோழ வாய்க்கால், குலோத்துங்க சோழ வாய்க்கால் முதலிய பெயர்கள் வழங்கிவந்தன. சதுர்ப்பேதிமங்கலத்துப் பெருங்குறி மகாசபையார் கோயில் காரியங்களைக் கவனித்து வந்தனர். சதுர்ப்பேதிமங்கலம் என்பது நான்கு வேதங்களிலும் வல்ல பிராமணர்கள் வசிக்கும் இடம். குலோத்துங்க சோழதேவன் காலத்தில் நொடியூர் பட்டணத்துக் கிள்ளியூர் மலையினின்றும் கல் கொண்டுவந்து பெருமானுக்குப் பீடம் சாத்தப்பெற்றது. விக்கிரமசோழன் காலத்தில் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டுப் பஞ்சநிவர்த்திக்காகப் பொற்காசுகள் வழங்கப்பெற்றன. கோயிலுக்குச் செய்யும் அறங்கள் ஆதிசண்டேஸ்வரர் பெயரால் வழங்கப்பெற்றன. திருவேகம்படி நங்கையார் என்பவர், ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் முதலிய சிலைகளையும், வேறு சில வடிவங்களையும் செய்துவைத்தார் என்று சொல்லப்படுகிறது. பொன்னின் நிறை அளவுகளாக, கழஞ்சு, மஞ்சாடிகள் கூறப்பெற்றுள்ளன. வழிகளுக்கு கௌசலை வழி திருவரங்கவழி, வீரநாராயணவழி என்னும் பெயர்கள் உள்ளன. ஓர் கல்வெட்டில் "நித்தவினோத வளநாட்டு, ஆலூர்க்கூற்றத்து இரும்புதல்" வரியில், இரும்புதல் என்பது ஓர் வைப்புத் தலம். "இரும்புதலார் இரும்பூளையுள்ளார்" என்று திருவீழிமிழலைத் திருத்தாண்டகத்தில்



அப்பர் கூறுகிறார். பெருநகரங்கள் தனியூர் என்றும், கிராமங்கள், ஊர், பற்று என்றும் வழங்கிவந்தன. இக்காலத்தும் இப்பகுதி கீழ்க்கோயில் பத்து என்று வழங்குகிறது. பற்று என்பது பத்து என மருவிவிட்டது. பல நாடுகளைச் சேர்ந்த எண்ணூர். பெருகல்லூர், அழிசிக்குடி முதலிய ஊர்கள் சொல்லப்பட்டுள்ளன. அறஞ் செய்தவன், அறத்தைக் காப்பாற்றுபவனுடைய திருவடிகளைத் தலையில் சூடிச் செய்தான் என்று ஒரு வெண்பாவால் தெரியவருகிறது.

## 12. புராண வரலாறுகள்.

பக்தி மார்க்கத்தில் நின்று பரமன் அருளைப் பெற்ற முன்னோர் பலருடைய பழய வரலாறுகளாகிய புராணங்கள், பின் வழியினராகிய மற்றையோரும் அவனருளை எளிதில் பெறுவதற்குச் சாதனங்களாக — வழிகாட்டிகளாக அமைந்துள்ளன. இனிப்புப் பொருளில் மருந்தை உள்ளடக்கித் தருவதுபோலப் பல சாஸ்திரங்களின் உண்மைகளையும், தத்துவங்களையும் உள்ளடக்கிக் கதைவடிவங்களாக ஆன்றோர்கள் புராணங்களை அமைத்தனர். அவ்வரலாறுகளைப் படிப்பதால், அவைகளில் அடங்கிய உண்மைகளைக் கைக்கொண்டு, முன்னோர்கள் சென்ற மார்க்கங்களில் பிறரும் சென்று வழிபடுவதற்குப் புராணங்கள் உதவக் கூடும்.

இத்தலத்தின் பெருமைகளைப்பற்றிய பழய வரலாறுகள், ஸ்காந்த புராணத்தில் வாயு சம்ஹிதையில் தேவகாண்டத்தின் பிற்பகுதியில் கரவிந்தபுரமகாத்மியத்திலும், சநத்குமார சம்[illegible]யில் பிரம்மபுரி மகாத்மியத்திலும் விரிவாக[illegible]டுள்ளன. [illegible]ச் சூத நந்திகேஸ்வரர், சநத்கு[illegible]ருக்குக் கூ[illegible] முனிவர் மற்ற முனிவர்[illegible]க்குக் கூறியதாக [illegible]ளன. அவைகளிற் சில சுருக்[illegible]கக் கூறப்படும்.

### 1. பி[illegible] வழிபட்டது.

படைத்தல், காத்[illegible], அழித்தல் என்னும் மூ[illegible]று தொழில்களுக்கும் பி[illegible], திருமால், ருத்[illegible]ன்

W2-770
MADRA

மூவரும் தலைவராவர். ராஜச, சத்துவ, தாமச குணங்களின் வடிவமாக மூவரையும் கூறுவர். இவர்களுள் பிரமன், தனக்குரிய படைப்புத் தொழிலால் அகங்காரங்கொண்டான். இதனால் அவனுக்குச் சக்தி குறைந்தது. பிரமன் செய்வதறியாது மயங்கினான். அப்போது பெருமான் ஆகாசவாணி — அசரீரியின் மூலம், காவிரிக்குத் தென்கரையிலுள்ள கரவித்தவனம் (களாக்காடு) சென்று லிங்கப் பிரதிட்டை செய்து வழிபடும்படியாக உபதேசித்தார். பிரமன் அவ்வாறே இத்தலத்துக்கு வந்து ஓர் மூர்த்தியைப் பிரதிட்டை செய்து தவஞ்செய்யத் தொடங்கினான். நான்கு வேதவடிவான தீர்த்தங்களும் பணிவிடை செய்தன. ரிக்வேதம் அபிடேகநீர் தந்தும், யசுர்வேதம் மலர் பறித்தும், சாமவேதம் தூபதீபங்களைத் தந்தும் பணிவிடை செய்தன. பிரமன் வேத தீர்த்தத்தில் படிந்து, விபூதி ருத்திராட்சங்களாகிய சிவசின்னங்களை அணிந்து, அந்தந்தப் பருவங்களில் தீயில் நின்றும், காற்றில் உறைந்தும், நீரில் படிந்தும் தவஞ்செய்தான். பெருமான் களாமரத்தடியில் பிரமனுக்குக் காட்சி கொடுத்து, அவனுடைய அகங்காரத்தைப் போக்கிப் பஞ்சாட்சர உபதேசம் செய்தார். பிரமன் மீண்டு தன் படைப்புத் தொழிலை நடத்தலானான். இதனால் இத்தலத்துக்குப் பிரம்மபுரி, சதுர்வேதபுரம் என்னும் பெயர்களும், தீர்த்தத்துக்கு வேத தீர்த்தம், வேத புட்கரிணி என்னும் பெயர்களும் உண்டாயின. சித்திரைப் பூரணையில் இத்தீர்த்தத்தில் நீராடிப் பெருமானை வழிபடுவோர் சகல பேறுகளையும் பெறுவர்.

## 2. மலயத்துவஜன், சாபம் நீங்கப்பெற்றது.

மலயத்துவஜன் என்னும் ஓர் அரசன் எல்லா உயிர்களிடத்தும் அன்புடையவனாகவும், வேத சாஸ்திரங்களில் சிறந்த அறிவுடையவனாகவும், பல அறங்களைச் செய்பவனாகவும் வாழ்ந்து வந்தான். அவனுக்கு ஓர் அந்தணர் குருவாய் இருந்தார். அவர் தாம்பிரபரணி நதிக்கரையில் ஓர் வேள்வி நடத்த விரும்பி,



அரசனை உடனிருந்து நடத்தித் தரும்படியாக வேண்டினார். அரசனும் தான் வருவதாகச் சொல்லி, அவ்விதம் செல்லாமல் சந்திரசேனன் என்னும் படைத்தலைவனை அனுப்பிவைத்தான். அரக்கர்கள் சந்திரசேனனுடன் போர் செய்து யாகத்தை அழிக்கத் தொடங்கினார்கள். அரசனும் தாமதித்து வந்தான். இதனால் குரு கோபங்கொண்டு, வாக்குத் தவறிய அரசனை அரக்கனாகும்படி சபித்துவிட்டு, வேறிடம் சென்று வேள்வியை முடித்தார். அப்போது அகத்திய முனிவர் அரசனுக்கு, கரவித்தவனம் சென்று வழிபடும்படி உபதேசித்தார். மலயத்துவஜன் இத்தலத்துக்கு வந்து வேத தீர்த்தத்தில் நீராடிப் பெருமானை வழிபட்டான். புதிய உடலைப் பெற்றான். கோபுரம், மண்டபம் முதலிய திருப்பணிகளைச் செய்தான். காணிக்கையாகப் பொருள் வழங்கினான். திருவிழா நடத்தினான். சித்திரை வளர்பிறையில் மிருகசீரிட நாளில் கொடியேற்றமும், பூரத்தில் தேரோட்டமும், சித்திரை நாளில் தீர்த்தவாரியும் நடத்தி வைத்தான். இதனால் இத்தலத்திற்கு வந்து நீராடி வழிபடுவோர், பெரியோரின் சாபத்தினின்றும் நீங்கப்பெறுவர்.

## 3. விதர்ப்பன் வழிபட்டது.

ஒரு காலத்தில் 12 வருட காலம் வரையில் மழை
யின்மையால் பெரும் பஞ்சம் உண்டாயிற்று. மக்களும்,
பிற உயிர்களும் உருவழிந்து துன்புற்றனர். பின்பு
நற்காலத்தின் பயனாக மழை பெய்யவே, நாடு வளம்
பெற்று விளங்கியது. அக்காலத்தில், விதர்ப்பன்
என்னும் மன்னன் தாரகநாட்டை ஆண்டு வந்தான்.
அவனுக்குச் சிவவல்லபன் என்ற பெயரும் உண்டு.
அவன் எல்லோரிடத்தும் அன்புடையவன். சாஸ்திர
ஞானம் உடையவன். கர்ணனைப் போன்ற கொடை
யாளி. அவன் ஒருநாள் தன் பரிவாரங்களுடன் வேட்
டையாடப் புறப்பட்டு வந்து, வெப்பத்தால் களைப்
புற்றுக் கரவித்தவனத்தை அடைந்தான். வேத

தீர்த்தத்தையும், நடுவிலுள்ள கோயிலையும் கண்டான். அப்போது வண்டுகள் ரீங்காரம் செய்துகொண்டு பக்கத்திலுள்ள புற்றில் மறைந்தன. அரசனது ஆணைப்படி வேடர்கள் புற்றை இடிக்கவே, ஓர் லிங்கம் வெட்டுக் காயத்துடன் பேரொளி பெற்று விளங்கு வதைக் கண்டான். அப்போது அசரீரியின் மூலம் சில வார்த்தைகளைக் கேட்டான். "அரசனே பீடத் திற்குமேல் பெயர்க்க வேண்டாம். பூர்வ புண்ணியத் தால் இந்த லிங்கத்தைக் கண்டாய். இவைகளை உனக்கு அறிவிக்கவே இறைவன் வண்டினங்களை ஏவினான்" என்றது அசரீரி. அரசன் மெய்சிலிர்த்துப் பரவசமாகி அன்புடன் வழிபட்டான். பெருமானுக் குப் பஞ்ச கௌயப்பொருள்களால் அபிஷேகம் செய் வித்துப் பட்டாடைகளையும், அணிகளையும் சாத்தி வணங்கினான். பல கிராமங்களை நன்கொடையாக வழங்கினான். பல முனிவர்களுக்கும், ஆதி சைவர், சைவர் முதலிய மரபினர்களுக்கும், கோயிலைச் சுற்றி லும் வீடுகள் அமைத்துக் கொடுத்தான். கோடைக் காலத்தில் குடிநீர் வழங்குவதற்காகச் சிலரை வாழச் செய்தான். இவ்வாறு புற்றின் மூலம் பிரமபீடத் திற்குமேல் இலிங்கத்தைக் கண்டதால் பார்வபுரம் என்ற பெயர் உண்டாயிற்று.

## 4. பூமிதேவி தவம் செய்தது.

தேவிகள் பலராவர். பூமாது, புவிமாது, கலைமாது ஜயமாது, புகழ்மாது எனப் பலவகைப்படுவர். அவர் களுள் புவிமாது என்றும், பூமிதேவி என்றும் போற் றப்பட்ட நிலமகள் ஒரு காலத்தில் பிரமனிடம் சென்று, உலகில் பாவங்களைச் செய்வோர் அதிகரித்து வருவதால் அவர்களைத் தாங்கமுடியவில்லையே என்று முறையிட்டாள். பல மலைகளையும், கடல்களையும் தாங்குவதால் பூமிக்குப் பாரமில்லை. ஆனால் கடவுளுக்குத் துரோகம் செய்வோர், நம்பிக்கைத் துரோகம் செய்வோர், மற்றும் பல பாவங்களைச் செய்



வோர் ஆகியவர்களைச் சுமப்பதுதான் பூமிக்குப் பாரமாம்.

"உற்ற பூமிக்குப் பாரம் உவரியும் மலைகளெட்டும்
மெத்தவும் பாரம் அன்று மிகுந்த பாரங்கள் சொல்லின்
கத்தனுக் கடுந்துரோகம் கனக்கவே விசுவசித்து
வைத்தவர்க் கடுந்துரோகம் மகாபாரம் ஆகுமன்றே"
(நீதிசாரம்)

பூமிதேவியின் குறைகளைக் கேட்ட பிரமன், தேவியை நோக்கி "தேவியே பல முனிவர்கள், வேத வித்துக் கள், கங்கை முதலிய நதிகள், கைலாயம் முதலிய மலைகள், பல க்ஷேத்திரங்கள் ஆகியவைகளை நீ தாங்கு வதால் வருந்தக் கூடாது. நிலம், நீர், நெருப்பு, காற்று, விசும்பு என்னும் பஞ்ச பூதங்களுக்கும் அடிப்படை யாய் உள்ளாய். எனினும் பாவிகளையும் சேர்த்துச் சுமப்பதற்குத் தனிச் சக்திவேண்டும். பூலோகத்தில், நாவலந்தீவில், சோழ நாட்டில் காவிரிக்குத் தென் கரையில், கரவிந்தவனம் (களாக்காடு) உள்ளது, பிரம்மபுரி என்றும் பெயருண்டு, அவ்விடத்திற்குச் சென்று தவஞ்செய்து இறைவனை வழிபட்டால், தீயின் உஷ்ணம்போலும், மதியின் நிலவுபோலும், சூரியன் ஒளிபோலும், காற்றின் சக்திபோலும், தண்ணீரின் தண்மைபோலும், சிவன் மகாத்மியத் தைப்போலும், பூமியின் உறுதியைப்போலும் உனக் குத் தாங்கும் சக்தியைக் கொடுப்பான்" என்று பிரமன் உபதேசித்தான்.

பூமிதேவி வேற்றுருவம் எடுத்துக் கரவிந்தவனம் சென்று வேத தீர்த்தத்தில் படிந்து புன்னைமரத்தின், அடியில் பெருமானைப் பிரதிட்டை செய்து, மூன்று காலத்திலும் வழிபட்டு, இலை, நீர், காற்று இவை களையே உணவாகக்கொண்டு தவம்புரிந்து வந்தாள். பெருமான் பூமிதேவிக்குக் காட்சி கொடுத்து, "நீ புன்னையின் நிழலில் வழிபட்டதால், உனக்கு உல கத்தை நன்கு தாங்கும்படியான சக்தி உண்டாகும்.

பாவிகளின் சேர்க்கையால் உண்டான பாவம் நீங்கப் பெற்றாய். வேத தீர்த்தத்தில் நீராடி ஐந்தெழுத்தை உச்சரிப்போர் எல்லாத் துன்பங்களிலிருந்தும் விடுபடுவர்." என்று கூறி மறைந்தார். பூமிதேவி வழிபட்டதால் இத்தலத்திற்குப் பூமிபுரம் என்ற பெயர் உண்டாயிற்று.

### 5. சுவரதன், சாபம் நீங்கப்பெற்றது.

சுவரதன் என்னும் மன்னன் விந்திய தேசத்தை ஆண்டு வந்தான். யாவரிடத்தும் அன்பும், படை வலிமையும் உடையவன். ஒருநாள் தேவ சர்மன் என்னும் அந்தணன், அரசனுடைய வாயிலில் சென்று உணவு வேண்டினான். அரசன் உள்ளே உணவருந்திக்கொண்டிருந்ததால் வாயில் காப்போர் அந்தணன் பிச்சை கேட்டதைத் தெரிவிக்கவில்லை. இதனால் கோபங்கொண்ட அந்தணன், அரசனைப் பிசாசு வடிவமாகும்படி சபித்தான். சாபத்தால் வேற்று வடிவங்கொண்ட அரசன், அந்தணனிடம் மன்னிக்கும்படி வேண்டினான். அந்தணன், காலவ ரிஷியின் மூலம் சாப நிவர்த்தி உண்டாகும் எனக் கூறிச் சென்றான். அரசன் பல இடங்களையும் சுற்றிக்கொண்டு கரவிந்த வனத்தை அடைந்து அவ்விடம் தவஞ்செய்யும் காலவ ரிஷியைக் கண்டான். முனிவன் அரசனிடம் பெருமானை வழிபடும்படி போதித்துக் கமண்டல நீரை அரசன்மேல் தெளித்தான். அரசன் பிசாசு வடிவம் நீங்கிப் பழய வடிவம் பெற்று வேத தீர்த்தத்தில் நீராடிப் பெருமானை வழிபட்டு முத்தியடைந்தான்.

### 6. வீரசோழன், பேறுபெற்றது.

வீரசோழன் என்னும் மன்னன் சிறந்த அறிவும், அருச்சுனன் போன்ற போர்த்திறமையும், பூமியைப் போன்ற பொறுமையும், கடல்போன்ற காம்பீரமும் பொருந்தியவனாய் விளங்கி வந்தான். ஒருநாள் மாலையில் பல சேனைகளும் சூழ, யானையின்மேல் பவனிவந்தான். அப்போது மேய்ச்சல் பசுக்கள் வீடு



திரும்பிக்கொண்டிருந்தன, எதிர்பாராதபடி யானை மதங்கொண்டு பசுக் கூட்டத்திற்குள் புகுந்து ஓர் பசுவை மிதித்துக் கொன்றது. அரசன் மிக வருந்தினான். அந்தணர்கள் அரசனிடம், பல தலங்களுக்கும் யாத்திரை செய்து வழிபட்டால் கொலைப் பாவம் நீங்கும் என்றார்கள். அரசன் பல தலங்களுக்கும் சென்று முடிவில் கரவிந்தவனம் சென்று வேத தீர்த்தத்தில் நீராடிப் பெருமானை வழிபட்டான். அப்போது அசரீரி அறிவித்தபடி கோயிலைப் புதுப்பித்துத் தீர்த்தங்களுக்குப் படித்துறைகள் கட்டுவித்தான். சித்திரை மாதத்தில் திருவிழா நடத்தினான். அந்தணர்களுக்கும் மற்றையோர்க்கும் இல்லங்கள் அமைத்துக் கொடுத்தான். அரசன் இவ்வாறு பல அறங்களைச் செய்து பெருமானை வழிபட்டுப் பசுக் கொலைப்பாவத்தினின்றும் விடுபட்டுத் தன் நாடு சேர்ந்து, தன் மகனிடம் அரசுரிமையைக் கொடுத்துச் சிவலோகம் சேர்ந்தான்.

### 7. சுவரதன் என்ற அந்தணன் வழிபட்டது.

சுவரதன் என்னும் அந்தணன் பிரம்மச் சரியத்தில் நின்று தன் குருவுக்கு வழிபாடு செய்துகொண்டு குருவிடம் பல கலைகளையும் கற்று வந்தான். ஒருநாள் அவனுக்கு ஓர் சந்தேகம் உண்டாகிக் குருவிடம், 'பிரமச்சரியம், கிருகத்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்னும் நான்கு ஆச்சிரமங்களில் (மாணவநிலை, இல்நிலை, வனநிலை, துறவுநிலை) எது சிறந்தது" என்று கேட்டான். குரு அவனுக்கு "பிரமச்சரியம் எந்த வைதிகக் காரியமும் செய்ய உரிமையில்லை, வானப்பிரஸ்தன் வனவாழ்க்கையில் காய், கனி, கிழங்குகளை உண்டு தனக்கொன்றும் வைத்துக்கொள்வதற்கில்லை. முற்றும் துறந்த முனிவரும் ஒன்றும் செய்யமுடியாது. ஆதலின் இல்லறமே சிறந்தது. "இல் வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும், நல்லாற்றின் நின்றதுணை" என்ற பொய்யா மொழியின்படி, மற்ற

மூவரும் இல்லறத்தானேயே எதிர் நோக்கியிருக்கிருர்கள். மேலும் கர்மங்கள் ஸ்மார்த்தம், சிவார்ப்பணம் என்று இருவகையாகச் செய்யப்படும். ஸ்மார்த்தம் ஸ்மிருதிகளின்படி செய்வது, சிவார்ப்பணம் கடவுளுக்கென்றே செய்வது. கர்மங்களைச் சிவார்ப்பணமாகச் சிவத்தலத்தில் செய்தல் நலம்" என்று உபதேசித்தார். சுவரதன் இல்லறத்தில் புகுந்து நற்குணமுடைய சுசீலை என்னும் நங்கையை மணந்து வாழும்போது மனச் சாந்தி ஏற்படாததால், பல தலங்களுக்கும் சென்று முடிவில் பிரம்மபுரிக்கு வந்து, வேத தீர்த்தத்தில் படிந்து, கோயிலை வலம்வந்து வழிபட்டான். பெருமான் கட்டளைப்படி இத்தலத்தில் தானதருமங்களைச் செய்தான். அடியார்களை உபசரித்தான். அப்போது அவனுக்குச் சுசீலையின் மூலம் ஓர் பெண் குழந்தை பிறந்தது. பிறகு வேதசாஸ்திரங்களை அறியக்கூடிய புதல்வர்கள் பிறந்தார்கள். சுவரதனும் பல காலம் வாழ்ந்து முத்திபெற்ருன்.

## 8. இந்திரன் வழிபட்டது.

தேவலோகத்துக்குத் தலைவனான இந்திரன் கௌதம முனிவரின் மனைவி — அகல்யையிடம் விருப்பங்கொண்டு, ஆச்சிரமத்தை அடைந்தான். இதையறிந்தமுனிவர் இந்திரனுக்குச் சாபமிட்டார். சாபத்தால் இந்திரன் தன் பதவி இழந்து வருந்தும்போது, அகத்திய முனிவர் அவனிடம் "பல தலங்களுக்கும் யாத்திரை செய்து வழிபட்டால் சாபம் நீங்கும்" என்று உபதேசித்தார். இந்திரன் பல தலங்களுக்கும் சென்று வழிபட்டு, முடிவில் கரவிந்தவனம் (களாக்காடு) சென்று வழிபட்டு வந்தான். அப்போது நாரதர் அவனுக்கு வேத தீர்த்தத்தின் பெருமைகளையும், பிரிவுகளையும் அவற்றில் நீராடவேண்டிய முறைகளையும், எந்தெந்தக் காலங்களில் எப்படித் தீர்த்தமாடவேண்டும் என்னும் விதிகளையும் விரிவாக உபதேசித்தார். (இவைகள் தீர்த்தங்கள் என்ற பகுதியில்



விவரித்துக் காட்டப்பெற்றுள்ளன.) இந்திரன் இத்தலத்தில் தங்கி வேத தீர்த்தத்தில் அவ்வக் காலங்களில் முறைப்படி நீராடிப் பெருமானை வழிபட்டுச் சாபம் நீங்கப்பெற்றுத் தன் இருப்பிடம் சேர்ந்தான்.

"நமது பெயர் திருக்களாநாதனென உலகுரைக்கும்
கமழு நறுங்களா நாதனென ஒருகாற் கழறுவரேல்
எமதெழுத்தைத்தினைப் பதினுபிரந்தரஞ் செப்புதற் கிணையாம்
அமைவுறு நல்லிக பரசித்தியைப் பெற்றடைகுவரால்"
(திருக்கருவைப்புராணம்)

## 13. துதிப்பாடல்கள்

### விநாயகர்

1. மண்ணுலகத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதில் முற்றுறக்
கண்ணுதல் உடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.
— கந்தபுராணம்

### முருகன்

2. பன்னிரு கரத்தாய் போற்றி
பசும்பொன்மா மயிலாய் போற்றி
முன்னிய கருணை ஆறு
முகப்பரம் பொருளே போற்றி
கன்னியர் இருவர் நீங்காக்
கருணைவாரிதியே போற்றி
என்னிரு கண்ணே கண்ணுள்
இருக்குமா மணியே போற்றி.
— திருச்செந்தூர்ப்புராணம்

### நடராஜர்—(கூடவல்லார்)

3. குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில்
பால்வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்தமாநிலத்தே.
— திருநாவுக்கரசர்

## திருக்களாவுடையார்

4. சடையானை வரமுதவச் சடையானைத் தனிச்சூலப்
படையானை எம்மையினிப் படையானைப் பவமரண
விடையானைத் திருநெடுமால் விடையானை
மதகயத்தோல்
உடையானைத் திருக்களாவுடையானைப் பரவுதுமால்.
— திருக்கருவைப்புராணம்

5. வாழ்த்திட நாவுண்டு பாவிக்கநீயுண்டு மண்ணிலுறத்
தாழ்த்திடச் சென்னியுமுண்டு கண்டாய்தண் களவின்மலர்
சூழ்த்திடு நீமுறைவார் அடியுண்டுவெ விரயம்
வீழ்த்திடு வாருமுண்டோ நெஞ்சமே என்மெலிவதுவே

6. இருக்கினும் நிற்கும்போதும் இரவுகண் துயிலும்போதும்
பொருக்கென நடக்கும்போதும் பொருந்திமண்
துய்க்கும்போதும்
முராக்கிதழ்க் கனிவாயாரை முயங்கிநெஞ் சழியும்போதும்
திருக்களாவுடைய நம்பா சிந்தையுன் பாலதாமே.

7. அதிசயம் உளத்திற்காட்டி அகம்புறந் தானுக்காட்டித்
துதிசெயக்கவி நாக்காட்டித் தொடக்கறு நேயங்காட்டி
மதியினிற் களிப்புங்காட்டி வந்தென்னை யாண்டுகொண்டான்
கதியெனவுலகம் போற்றக் களாநிழல் அமர்ந்தநாதன்.

8. மனமொழிந்து காம மயக்கொழிந்து மாறாச்
சினமொழிந்து வாதனையுந் தேய்ந்தால்—இனிய
குருக்களாய் வந்தடிமை கொண்டுவிடுக்கும்
திருக்களா வாழும் சிவம். —திருக்கருவை அந்தாதி

9. சுந்தரமணியே போற்றி சுகமருள் சுடரே போற்றி
மந்திரமுதலே போற்றி மறையவர் வாழ்வே போற்றி
சந்திரமுடியாய் போற்றி சண்முகன் தாதா போற்றி
இந்திரற்கருள்வோய் போற்றி எந்தலே போற்றி போற்றி.
— திருவெறும்பியூர்ப்புராணம்

## தேவியார்

10. மூவர்க்கும் முதற்பொருளாய் முத்தொழிற்கும் வித்தாகி
நாவிற்கும் மனதிற்கும் நாடரிய பேரறிவாய்த்
தேவர்க்கும் முனிவர்க்கும் சித்தர்க்கும் நாகர்க்கும்
யாவர்க்கும் தாயாகும் எழிற்பரையை வணங்குவாம்.
— பதிபசுபாச விளக்கம்



நடராஜர் சிவகாமசுந்தரி

11. செறிதரும் உயிர்தொறும் நிறைந்து மன்னிய
மறுவறும் அரனிடம் மரபின் மேவியே
அறுவகை நெறிகளும் பிறவும் ஆக்கிய
இறைவிதன் மலரடி இறைஞ்சி ஏத்துவாம்.

— கந்தபுராணம்

## தக்ஷிணாமூர்த்தி—(தென்முகக் கடவுள்)

12. மும்மலம் வேறுபட் டொழிய மெய்த்துயிர்
அம்மலர்த் தாள் நிழல் அடங்கும் உண்மையைக்
கைம்மலர்க் காட்சியின் கருணைநல்கிய
செம்மலை யலதுளம் சிந்தியாதரோ.

— திருவானைக்காபுராணம்

## நால்வர்

13. பூழியர் கோன் வெப்பொழித்த
புகலியர் கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில்
அணைந்தபிரான் அடிபோற்றி
வாழி திருநாவலூர்
வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத
வூரர் திருத்தாள்போற்றி.

## அறுபத்துமூவர்

14. புகழ்மிகு சரியை முன்னாப்புகலு நாற்பாதந் தம்முள்
இகழ்வறு தத்தமக்கேற்ற சாதனங்
கைக்கொண்டே
அகழ்மலத் தினராயம்மான் அடிநிழலடைந்தோராகும்
நிகழறுபத்துமூவர் சேவடி சென்னி சேர்ப்பாம்.

— உறையூர்ப்புராணம்

## சண்டேசுரர்

15. மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினாலெறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்.

— சுந்தரர்

894.138, 21173·Tr
N56



## இறைவனிடம் திருநந்திதேவர் விண்ணப்பஞ் செய்தருளிய

## பத்துறு பேறு

1. மறைகள் சிந்தனை சைவசித் தனைபொரு மனமும்
தறுகண் ஐம்புலன் களுக்கேவல் செய்யுறாச் சதுரும்
பிறவி நீதெனுப் பேதையர் தம்மொடு பிணக்கும்
உறுதி நல்லறஞ் செய்பவர் தங்களோ டுறவும்.

2. யாது நல்லன்பர் கேட்கினு முதவுறு மியல்பும்
மாதவத்தினோர் ஒறுப்பினும் வணங்கிடு மகிழ்வும்
ஓது நல்லுப தேசமெய் யுறுதியும் அன்பர்
தீது செய்யினுஞ் சிவச்செய லெனக்கொளுந்தெளிவும்

3. மனமும் வாக்குநின் அன்பர்பால் ஒருப்படு செயலும்
கனவி லும்உன தன்பருக் கடிமையாங் கருத்தும்
நினைவில் வேறொரு கடவுளை வழிபடா நிலையும்
புனித நின்புகழ் நாடொறும் உரைத்திடும் பொலிவும்

4. தீமை யாம்புறச் சமயங்கள் ஒழித்திடுந் திறனும்
வாய்மை யாகவே பிறர்பொருள் விழைவுறா வளனும்
ஏமு றும்பர தாரநச் சிடாதநன் னோன்பும்
தூய்மை நெஞ்சின்யான் எனதெனுஞ் செருக்குறாத்
துறவும்.

5. துறக்கமீ துறையினும் நரகில் தோய்கினும்
இறக்கினும் பிறக்கினும் இன்பந் துய்க்கினும்
பிறைக்கொழுந் தணிசடைப் பெரும இவ்வரம்
மறுத்திடா தெனக்குநீ வழங்கல் வேண்டுமால்.

---

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன்நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருக்களாவுடையார் திருவடி போற்றி.

112770

---

திருச்சிராப்பள்ளி யுனைடெட் பிரிண்டர்ஸ் லிமிடெட், திருச்சி.

